**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.70/2012 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | வெற்றி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of December 2021.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். தபால் துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். புகார்தாரரை தெரியும் அ.சா.3 ன் பையன். ஆஜர் எதிரிகளை தெரியும் ஊர்காரர்கள். வழக்கு பற்றி ஏதுவும் எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையின்போது கடந்த 24.07.2011 ம் தேதி இரவு 9.40 மணியளவில் நாடார் சங்கம் அருகே வைத்து எதிரிகள் புகார்தாரரை கெட்ட வார்த்தையில் பேசியதாகவும், கல்லால் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், சம்பவத்தை நீங்கள் நேரில் பார்த்தாகவும், போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.70/2012 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | கமலாபாய் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of December 2021.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். புகார்தாரை யை தெரியும் என்னுடைய மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்து ஊர்காரர்கள். தேதி, மாதம் ஞாபகமில்லை சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் சங்கத்திற்கு பக்கத்தில் வைத்து சஞ்சய், ராஜா, மாணிக்கம் ஆகியோர் கல்லால் பின்னந்தலையில் அடித்ததாக பார்த்த நபர்கள் வந்து சொன்னார்கள். எதற்காக அடித்தார்கள் என தெரியாது. வெற்றி என்பவர் சம்பவத்தை பார்த்ததாக என் மகன் என்னிடம் சொன்னார். நான் நேரில் பார்க்கவில்லை. என் மகனை ஐகிரவுண்ட் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் உங்கள் பையனை கல்லால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. காயம் கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், உங்களுக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. உங்கள் மகனுக்காக பொய்யாக சாட்சி அளிக்கீறிற்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**